2002 ஏப்ரல் 18]

மக்களும் பயன்பெறுகின்ற வகையில் அரசு நிதி ஆதாரம் இப்பொழுது இல்லை என்றாலும் கூட, கூடிய விரைவில் அப்படி பின்தங்கிய அந்தப் பகுதியினுடைய மாணவர்கள் கல்வியைக் கற்கின்ற வகையிலும், அந்தப் பகுதி மக்களுக்குப் பேருந்து வசதியை அரசு ஏற்படுத்தித் தருவதற்கும் முயற்சிக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருந்த அந்தக் கோரிக்கையின் அடிப்படையில் அரசு பரிசீலித்து தகுந்த முடிவினை எடுக்கும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 165, திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி, மாண்புமிகு தொழில் மற்றும் வணிகவரித் துறை அமைச்சர்.

165—

எண்ணெய் சுத்திகரிப்பு

***5815—திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி**:

மாண்புமிகு தொழில் மற்றும் வணிகவரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினத்தில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, தொழில் மற்றும் வணிகவரித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினத்தில் புதிதாக எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை ஏற்படுத்தும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி.

திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் த்லைவர் அவர்களே, 7 மாதங்களுக்கு முன்னால் கேட்ட கேள்விக்கு இன்றைக்கு பதில் வந்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவரிடம் கேட்கக்கூடாது. என்னிடம்தான் கேட்க வேண்டும். (சிரிப்பு)

திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி: உங்களிடம் ஏற்கெனவே ஒரு கடிதம் கொடுத்து இருக்கிறேன். கேள்விக்குப் பக்கத்திலேயே கேள்வி கேட்கப்பட்ட தேதியையும் குறிப்பிட வேண்டும் என்று கேட்டிருக்கிறேன். அப்போதுதான் இலாகாவில் எவ்வளவு விரைவாக, துரிதமாகப் பணியாற்றுகிறார்கள் என்பதைத் தெரிந்துக்கொள்ள முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாகப்பட்டினத்திற்கு வாருங்கள்.

திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி: நாகப்பட்டினத்திற்கு வருகிறேன். நாகப்பட்டினத்தைச் சுற்றி, நாகப்பட்டினம், கோவில்களப்பால், நரிமணம் என்ற இடங்களிலே கச்சா எண்ணெய் எடுக்கப்படுவதாக அறிகின்றேன். அவற்றை சுத்திகரிப்பதற்காக சென்னைக்கு கொண்டு வருவதாகவும் அறிகின்றேன். இதனால் செலவினம் அதிகரிக்கின்றது. இதைக் குறைக்கின்ற வகையிலே அங்கேயே ஓர் ஆலையை ஏற்படுத்தினால் அங்கே விவசாயத்தையே நம்பிக்கொண்டிருக்கின்ற அந்த மாவட்டத்தினுடைய இளைஞர்களுக்குக் கூடுதலாக வேலைவாய்ப்புத் தரமுடியும். ஆகவே அரசு இதை மீண்டும் பரிசீலனை செய்யுமா என்று கேட்பதோடு, அங்கே இல்லையென்றால் அதைச் சுற்றியிருக்கின்ற வேறு எந்த இடத்திலாகிலும் ஆலை தொடங்குவதற்கு அரசிடம் ஏதேனும் திட்டம் இருக்கின்றதா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 11-05

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மாவட்டம் பனகுடியில் வருடத்திற்கு 5 லட்சம் டன் உற்பத்தித் திறன் கொண்ட சுத்திகரிப்பு ஆலை மத்திய அரசினால் தொடங்கப்பட்டு, கடந்த பத்தாண்டுகளாக இயங்கி வருகின்றது. இதன் திட்டச் செலவு ரூ.104 கோடி ஆகும். இதன் உற்பத்தித் திறனை ஆண்டுக்கு 10 லட்சம் டன்களாக அதிகரிக்க ஆயத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில் திட்டச் செலவு ரூ. 30 கோடி ஆகும். இப்பணி, இவ்வாண்டு இறுதிக்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

2002 ஏப்ரல் 18]

இந்நிறுவனத்தில் எல்.பி.ஜி., நாப்தா, மண்ணெண்ணெய், டீசல் போன்றவை தயாரிக்கப்படுகின்றன. மேலும் கடலூருக்கு அருகில் 2,000 ஏக்கர் பரப்பளவில் சுமார் ரூ.3480 கோடி மதிப்பீட்டுச் செலவில் பெட்ரோலியப் பொருட்களைச் சுத்திகரிப்பு செய்யும் நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகமும், ஐதராபாத்தில் உள்ள நாகார்ஜுனா உர உற்பத்தி நிறுவனமும் இணைந்து இத்திட்டத்தைச் செயல்படுத்திக் கொண்டிருக்கின்றன. 1,000 ஏக்கர் நிலம், நிறுவனத்தின் பொறுப்பில் உள்ளது. எஞ்சிய 1,000 ஏக்கர் நிலம், சிப்காட் நிறுவனத்தின் மூலமாகக் கையகப்படுத்தும் பணி முடிவடைந்துவிட்டது. முக்கியத் தளவாடங்கள் இறக்குமதி செய்யப்பட்டு, திட்டம் அமல்படுத்தும் இடத்திற்கு வந்து சேர்ந்துள்ளன. பிற சாதனங்கள் வாங்குதல், திட்டத்தின் நிருவாகம், செய்முறை உரிமம் பெறுதல் போன்ற பணிகள் முடிவுற்றுள்ளன. இந்நிறுவனம் 2004 ஆம் ஆண்டில் உற்பத்தியைத் தொடங்கும். இதன்மூலம் அப்பகுதி இளைஞர்களுக்கு வேலை கிடைக்க வாய்ப்புள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 166, திரு. கா.பூ. முனுசாமி, மாண்புமிகு வனம், மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

166—

வன வளர்ப்புத் திட்டம்

***3326—திரு. கா.பூ. முனுசாமி:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடந்த காலத்தில் வன வளர்ப்புத் திட்டத்தில் ஆண்டுக்கு ரூ.100 கோடி வீதம் 4 ஆண்டுகளுக்கு ரூ.400 கோடி ஒதுக்கப்பட்டதில், கிராமங்களுக்கு ஒதுக்கப்பட்ட ரூ.40 இலட்சத்தில் ரூ.5 இலட்சம் மட்டுமே செலவிடப்பட்டு, மீதிப் பணம் முழுமையாக செலவு செய்யப்படாததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது?